**அக்டோபர் - 8**

**"மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரிகாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்துக்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்." - கலா 6 : 7,8.**

மாம்சத்திற்கேற்ற சுயநலமான, அநியாயமான, அநீதியான ஆசைகளை நம்முடைய இருதயங்களிலும், ஜீவியங்களிலும் ஆட்சி செலுத்த நாம் அனுமதிக்கும் ஒவ்வொரு சமயத்திலும், நாம் மாம்சத்திற்கென்று விதைக்கிறோம். ஒவ்வொரு விதைப்பும் கூடுதலான விதைப்பை இலகுவாக்கி, அந்தப் பாதையில் முடிவாகிய மரணத்தை அதாவது இரண்டாவது மரணத்தை அடைய நிச்சயப்படுத்துகிறது. அதற்குமாறாக, ஆவிக்கென்று விதைக்கிற ஒவ்வொரு விதைப்பும், சுயநலம் முதலியவைகளுக்கு சார்பாக எழுகிற மாம்சத்தின் ஆசைகளுக்கு விரோதமாக எடுக்கும் ஒவ்வொரு எதிர்ப்பும், ஆவிக்குரிய வழிகளில் சுத்தமான காரியங்களுக்கும், மேன்மையான காரியங்களுக்கும், சார்பாகவுள்ள புது மனிதன் புது சித்தத்தின் ஒவ்வொரு அப்பியாசமும் ஆவிக்கென்று விதைப்பதாகும். இது கூடுதலான ஆவியின் கனிகளையும், ஆவியின் குணசீலங்களையும் கொடுக்கும். அதில் விடாமுயற்சியுடன் இருந்தால் முடிவாக கர்த்தரில் இரக்கமுள்ள வாக்குத்தத்தங்களுக்கும், ஒழுங்குகளுக்குமுள்ள இணக்கத்தில் நம்மைக் கொண்டு சேர்க்கும். அதாவது நித்திய ஜீவனுக்குள்ளும், ராஜ்யத்துக்குள்ளும் சேர்க்கும். **- Z ’04, 57 (R 3321)**

ஏதோ ஒரு இயற்கையான விதையை விதைத்து விட்டு மற்றொரு வகைத் தானியத்தின் விளைச்சலை அறுக்க எதிர்பார்க்கிறவன், தன்னையே மோசம் போக்கிக்கொள்கிறான். அதுபோலவே, ஒருவகை அடையாளமான விதையை விதைத்து விட்டு அடையாளமான மற்றொரு வகைத் தானியத்தை அறுக்க எதிர்பார்ப்பவனும் மோசம் போவான். ஒரு தானியம் அதற்கு ஒத்ததை உற்பத்தி செய்யும். ஆகையால், பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிற ஒருவன் தன் மாம்சத்திற்கென்று விதைத்து ஆவியின் விளைச்சலை அறுக்க எதிர்பார்ப்பானாகில், தன்னையே ஏமாற்றிக்கொள்கிறான். அவன் தனது மாம்சத்திற்கேற்ற விதைப்பிலிருந்து மாம்சத்திற்கேற்ற விளைவைப் பெறுவான். அது மரணத்தில் முடிவடையும். ஒரு ஆவிக்கேற்ற விதைப்பு ஆவிக்கேற்ற விளைவை உற்பத்தி செய்யும் என்கிற பிரமாணத்தின் மாறாத்தன்மையே நமக்கு ஆறுதல் அளிக்கிறதாயிருக்கிறது. ஆகையால் நாம் ஆவிக்கென்று விதைத்தால், அதாவது உண்மையாகவே ஆவிக்கேற்ற காரியங்களை ஆராய்ந்து பார்க்கவும், பரப்பவும், அப்பியாசிக்கவும் செய்தால், நாம் ஒரு ஏமாற்றத்தையும் அனுபவிக்க மாட்டோம். ஏனென்றால், நமது அறுவடை நித்திய ஜீவனாயிருக்கும். **- P ’36, 110.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**யோபு 4:8; நீதி 11:18; 22: 8; ஓசி 8:7; 10:12; ரோம 8:1,6,7,12-14; 6:6; 7:22,23; 13:14; கலா 5:16,17; 2கொரி 9:6; எபி 6:10; யோவா 4:14; யூதா 18-21; 1பேது 2:11; எபே 4:22-24.**

**கோபுர வாசிப்பு : Z ’15, 108 (R 5665).**

**வினாக்கள் : இந்த வார விதைப்புகள் எவையாக இருந்தன? அவை எதில் முடிந்தன? அவை எவ்வாறு விருத்தியாக்கப்படலாம்?**